வசதி பெற வேண்டிய நிலை இருக்கிறது. இதை இந்த ஆண்டே தூர் எடுத்து, இதனுடைய கொள் அளவை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய உணர்வைப் புரிந்து கொண்டு இந்த அரசாங்கம் உடனடியாக அதிலே தீவிர ஆய்வுகளை மேற்கொள்ளும்.

திரு. பு. கோ. நாராயணன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஏரியில் ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கின்றன. இந்த ஆக்கிரமிப்புகளை நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதைப் பற்றியும், தூர் எடுக்கின்ற இந்தத் திட்டம் ஆய்விலே இல்லாவிட்டாலும், வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அந்தப் பகுதி விவசாயிகளினுடைய அவசர அவசியத்தை உணர்ந்து, வறட்சி நிவாரணமாக இந்த வறட்சிக் காலத்திலேயே, உடனடியாக அதை எடுக்க அரசு உத்தரவு பிறப்பித்து, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உதவ முன்வருமா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளும். தூர் வாருகின்ற பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் எவ்வளவு பணமாகும் என்று நாம் எஸ்டிமேட் போட்டுத்தான் செய்ய முடியும். வறட்சி என்று வருகின்ற நேரத்தில் ஒரு கண்மாய்க்கு 50,000 ரூபாய், 70,000 ரூபாய் என்று ஒதுக்கினால் காணாது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இது சம்பந்தமாக ஒரு சரியான ஆய்வை நடத்தி வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கையை அளிக்கிறேன்.